# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (மாசி–பங்குனி) மார்ச் 2012 ஏர்-27, உழவு-03, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93815 45451

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : கே.ஏ.கணபதி<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| தானே புயல் | - 3 |
| நிவாரண நிதி | - 4 |
| வாழ்த்துகிறோம் | - 5 |
| வேண்டுகோள் | – 6 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 7 |
| கட்டிட நிதி | - 8 |
| என்றும் நலமுடன் வாழ | - 9 |
| கலாசார விருது | - 11 |
| திருவிளையாடல்கள் | - 12 |
| 50 வது ஆண்டு வளர்ச்சி | - 14 |
| திருமண சடங்குகள் | - 16 |
| முப்பெரும் விழா | - 19 |
| மன அமைதி | - 20 |
| ஆன்மீகம் | - 21 |
| மணமகள் தேவை | - 23 |
| மணமகன் தேவை | - 25 |
| மணமகள் தேவை | - 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் பொருட்டு முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நமது சங்கம் சார்பில் நிதி வழங்கிட முடிவெடுத்து, சென்ற மாத செய்தி மடல் வாயிலாக விடுத்த வேண்டுகோளை ஏற்று, காசோலை / வரைவோலை மூலமாக நிதியளித்த அனைத்து கொடை உள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் புயலால் அதிகம் பாதிப்பிற்குள்ளானவர்கள் விவசாயிகளே,. சுமார் 750 கிராமங்களில் வாழும் விவசாயிகள் - ஏறத்தாழ 20 லட்சம் விவசாயிகள் பலா மரங்கள், முந்திரித் தோப்புகள், நெற்பயிற்கள் போன்றவை முழுவதும் நாசமடைந்ததனால் பொருளாதார நெருக்கடிக்கும் மனத்துயரத்திற்கும் உள்ளாகியுள்ளனர். பெரும்பாலானவர்களின் வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களின் துயர் களைய ஒவ்வொருவரும் கை கொடுக்க வேண்டும் என்ற வகையில், 'தானே' புயல் நிதிக்கு உங்கள் தொகையை அனுப்பி உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் மின்பற்றாக்குறையால் தவித்துக்கொண்டிருக்கிறது. கூடாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமின் நிலையம் பாதுகாப்பானது என பல்வேறு நிபுணர் குழுக்கள் உறுதியளித்துள்ளதால் இனியும் காலம் தாழ்த்தாது, இந்த அனு மின் நிலையத்தின் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க, மாநில அரசு தக்க நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டும் எனச் சங்கம் சார்பாக தமிழக அரசைக் கேட்டுகொள்கிறோம்.

பள்ளி இறுதித்தேர்வு எழுதும் மாணவர்களுக்குச் சிரமம் ஏற்படாத வகையில், தடையற்ற மின்சாரம் அவர்களுக்குக் கிடைத்திட தமிழக அரசு ஆவண செய்ய வேண்டும். 10th, +2, தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும் அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற வகையில் தேர்வுகளைச் சிறப்பாக எழுதிட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

26-02-2012 அன்று நடந்த சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கம் மேலும் சிறப்பாகச் செயல்பட, சங்கத்தின் விதிகளில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு ஒரு மனதாக அனுமதி வழங்கிய பொதுக்குழுவிற்கு சங்கத்தின் சார்பாக அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

## 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவோம்



நீங்கள் அனுப்பும் காசோலை அல்லது வரைவோலையில்

Kongu Nanbargal Sangam

(கொங்கு நண்பர்கள் சங்கம்)

என்று குறிப்பிட்டு, தொகையை எழுதி அத்துடன் இந்தக் கூப்பனையும் நிரப்பி அனுப்பவும் :

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

காசோலை / வரைவோலை எண். : ..........................தேதி : ..........................

தொகை : ........................................

தொடர்பு எண். : ........................................

குறிப்பு : ❖ நன்கொடை வழங்குபவர்களுக்கு 80G சான்றிதழ் வழங்கப்படும்.

❖ வரைவோலை சென்னையில் மாற்றத்தக்க வகையில் இருக்கவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :–**

தானே புயல் நிவாரண நிதி

# கொங்கு நண்பர்கள் சங்கம்

'வெள்ளி விழா இல்லம்' எண்.34, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044-2835 1244 / 2744

# கொங்கு நண்பர்கள் சங்கம்

தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி அளித்தவர்கள்

| வ. எண். | பெயர் | | ஊர் | தொகை |
|---|---|---|---|---|
| | சென்ற இதழ் வரை மொத்த தொகை 2,85,000 | | | |
| 13. | திரு. நல்லியப்பன் (விஜய மஹால்) | | சென்னை | 25,000 |
| 14. | திரு.பி.சி.துரைசாமி, சக்தி மசாலா பி.லிமிடெட் | | ஈரோடு | 25,000 |
| 15. | திரு. என்.எம்.குமாரசாமி | | கோவை | 25,000 |
| 16. | திரு. ஆர்.செல்வராஜ் (செயலாளர் கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை) | | சென்னை | 10,000 |
| 17. | டாக்டர். கே.ஆர்.பி.சண்முகம் (இணைச் செயலாளர் கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை) | | ஈரோடு | 10,000 |
| 18. | திரு. கே.ராஜாமணி | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 5,000 |
| 19. | திரு. பி.கே.ஈஸ்வர மூர்த்தி | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 10,000 |
| 20. | திரு.வி.பி.வீரப்பன் | செயற்குழு உறுப்பினர்கள் | நாமக்கல் | 10,010 |
| 21. | டாக்டர். டி.எஸ்.செல்வராஜ் | செயற்குழு உறுப்பினர்கள் | சேலம் | 5,000 |
| 22. | திரு.வி.ஆர்.பாலசுப்பிரமணியம் | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 10,000 |
| 23. | திரு.எஸ்.அன்பழகன் | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 5,000 |
| 24. | திரு.எம்.எஸ்.இராஜேந்திரன் | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 5,000 |
| 25 | திருமதி மணிமேகலை புஷ்பராஜ் | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 5,000 |
| 26. | திருமதி உத்தமிபொன்னுசாமி | செயற்குழு உறுப்பினர்கள் | சென்னை | 5,000 |
| 27. | டாக்டர். எஸ்.அசோகன் (முன்னாள் செயற்குழு உறுப்பினர்) | | சென்னை | 10,000 |
| 28. | திரு.தியாகராஜன் | | சென்னை | 10,000 |
| 29. | திரு.ஜி.விஸ்வநாதன் | | சென்னை | 1,000 |
| 30. | திரு. டி.பி.சதாசிவம் | | சென்னை | 1,000 |
| 31. | திரு. பி.பெருமாள் | | சென்னை | 1,000 |
| 32. | திரு.சுப்பிரமணி | | சென்னை | 5,000 |
| 33. | திரு. எம்.வெங்கடாசலம் | | ஈரோடு | 1,000 |
| 34. | டாக்டர். என்.சிவாநந்தன் | | ஈரோடு | 3,000 |
| | | | **மொத்தம்** | **4,72,010** |

# வாழ்த்துகிறோம்

சாந்தி குழும நிறுவனங்கள் திரு. S.K.சுப்பிரமணியன் - திருமதி சாந்தி தம்பதியரின் மகன் செல்வன் கார்த்திக் சுப்பிரமணியன், நியூமரிக் பவர் சிஸ்டம்ஸ் லிமிடெட் திரு. இராம. செல்லப்பன் – திருமதி குணசுந்தரி தம்பதியரின் மகள் செல்வி மிருணாளினி செல்லப்பன் ஆகியோர் திருமணம் 26-02-2012 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக 25-02-2012 அன்று திருமண வரவேற்பு MRC நகர் மேயர் இராமநாதன் செட்டியார் ஹாலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பாம்பே ஜெயஸ்ரீ இன்னிசையும், சுவையான பல்வேறு வகையான உணவு வகைகளும், எல்லாவற்றிற்கும் மேலாக திருமண வீட்டாரின் இன்முகத்தோடு கூடிய கனிவான உபசரிப்பும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் மகிழ்வித்தன.

திருமண விழாவிலும், வரவேற்பு நிகழ்ச்சியிலும் தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், உயர் அலுவலர்கள், கொங்குச் சமுதாயச் சான்றோர்கள், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள், உறவினர்கள், நண்பர்கள் உள்பட திரளானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமதி சாந்தி, திரு.எஸ்.கே.சுப்பிரமணியன், திரு.இராம.செல்லப்பன், திருமதி குணசுந்தரி, திருமதி சங்கமித்ரா, திரு. ரகுநாத், திரு.அருண், திருமதி அனிதா, திரு. ஏ.கே.வெங்கடசாமி, திரு, பி.சண்முகம், டாக்டர் எம்.பி.வேலுசாமி, திரு. ஜி.இராமசாமி, திரு.எம்.தங்கமணி முதலானோர் திருமணத்திற்கும், வரவேற்பு நிகழ்ச்சிக்கும் வந்திருந்தவர்களை வரவேற்றனர்.

புதுமணத் தம்பதியர் கார்த்திக் சுப்பிரமணியன் - மிருணாளினி செல்லப்பன் இல்லற வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று நீடுடி வாழ சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது

❖❖❖❖❖

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்து வரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தை அனுப்பாத உறுப்பினர்கள் உடனே அனுப்பும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டிட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்பதால், கட்டிட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுகொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)


| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 70,66,336 |
| 1520 | | எஸ்.கௌதம் GH | 1,000 |
| 1521 | | ஜி.தேன்மொழி LH | 1,000 |
| 1522 | 2698 | S.சுப்ரமணியம் | 1,000 |
| 1523 | | S.சங்கவி LH | 1,000 |
| 1524 | | V.S.மிருதுளா LH | 1,000 |
| 1525 | | L.அனு LH | 1,000 |
| 1526 | | U.அனுராதா LH | 1,000 |
| 1527 | | P.S.பிரீதி LH | 1,000 |
| 1528 | | N.அருண்பிரகாஷ் GH | 1,000 |
| 1529 | 1431 | S.ராமன் | 1,000 |
| 1530 | | P.முரளீஸ்வரி LH | 1,000 |
| 1531 | 2104 | பெரியசாமி | 1,000 |
| 1532 | 338 | S.C.சென்னியப்பன் | 1,000 |
| 1533 | | D.தினேஷ் GH | 1,000 |
| 1534 | | திலீப் குமார் GH | 1,000 |
| 1535 | | K.ரங்கசாமி | 1,000 |
| 1536 | | D.ஸ்ரீதர் GH | 1,000 |
| 1537 | 1899 | T.M.சாமிநாதன் | 1,000 |
| 1538 | 086 | P.ராஜேந்திரன் | 1,000 |
| 1539 | 1626 | K.R.பெரியசாமி | 1,000 |
| 1540 | 1495 | V.தேவராஜ் | 1,000 |
| 1541 | 432 | S.மனோகரன் | 1,000 |
| 1542 | 2349 | M.நல்லசிவம் | 1,000 |
| 1543 | 2170 | R.கோவிந்தசாமி | 1,000 |
| 1544 | 853 | T.R.ராமநாதன் | 1,000 |
| 1545 | 1172 | K.பழனிசாமி | 1,000 |
| 1546 | | L.N Dr.M.செல்வராசு | 1,000 |
| 1547 | | A.ராஜன் | 1,000 |
| | | மொத்தம் | 70,94,336 |

# என்றும் நலமுடன் வாழ

## வயதான காலத்திலும் எய்ட்ஸ் வருமா?

பத்மஸ்ரீ Dr.வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்

**முதுமையிலும் எய்ட்ஸ் வருமா ?**



முதுமையிலும் எய்ட்ஸ் வரலாம். அதற்கு மிக முக்கியக் காரணமாக இருப்பது ரத்த மாற்று முறை, இதய பைபாஸ் அறுவை சிகிச்சை, புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை மற்றும் விபத்துகளில் சிக்கி அதிக ரத்தப்போக்குக் காரணமாக உடல் ரத்தம் ஏற்றும் அவசர நிலைகளில், ரத்தம் ஏற்றப்படும் போது தவறுதலாக எய்ட்ஸ் கிருமிகள் உடலுக்குள் புகுந்துவிட நேரலாம்.

மேலும், சுத்தம் செய்யப்படாத கத்தி, ஊசி, பிளேடு மற்றும் தோலில் பயன்படுத்தக்கூடிய வேறு சில பொருள்களாலும் எய்ட்ஸ் கிருமிகள் உடலில் புகுவதற்கு வாய்ப்பு உண்டு. மிக முக்கியமாக பாதுகாப்பற்ற உடலுறவின் மூலம் எய்ட்ஸ் பரவலாம். எய்ட்ஸ் நோய்க்கிருமி, உடலுக்குள் புகுந்து தன் “வேலையைக்” காட்ட பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிடும். அதனால், இன்றைய நடுத்தர வயது எய்ட்ஸ் நோயாளிகள், நாளை முதியோர் எய்ட்ஸ் நோயாளிகளாக மாற வாய்ப்பு உண்டு.

**எய்ட்ஸ் நோயின் அறிகுறிகள் என்ன ?**

முதன் முதலாக 1984 ம் ஆண்டுதான் ஹெச்.ஐ.வி. என்ற வைரஸ் கிருமியால் எய்ட்ஸ் நோய் வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எலீசா (Elisa) என்ற ரத்தப் பரிசோதனை மூலம் இதை உறுதிசெய்ய முடியும்.

நோயின் அறிகுறிகள் ஒவ்வொரு நிலைக்குத் தகுந்தவாறு முற்றிலும் மாறுபட்டுக்காணப்படும் ஆரம்ப நிலையில் எந்தவித அறிகுறியும் இல்லாமல் இருக்கலாம். அதே நோய் முற்றிய காலத்தில் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர், முதல் **3** முதல் **6** வாரங்களுக்கு உடல் சோர்வாகவும், சற்றுக் காய்ச்சலுடனும் காணப்படுவார். பிறகு இந்த இரண்டும் எந்தவித சிகிச்சையும் இல்லாமலேயே சரியாகிவிடும். சுமார் **5** முதல் **10** ஆண்டுகள் வரை இந்த நோய் எந்தவித அறிகுறியும் இல்லாமல் உடலில் மறைந்தே இருக்கும். அதற்குப் பிறகு இந்த நோய் தீவிரமடைந்து பல விதங்களில் வெளிப்படும்.

அதாவது, கொஞ்சம் கொஞ்சமாக உடல் இளைத்துக் கொண்டே போவது, இடைவிடாத வயிற்றுப்போக்கு, தொடர் காய்ச்சல், இடைவிடாத இருமல் போன்றவை ஏற்பட்டு இறுதியில் மரணம்கூட நேரலாம்.

இவை மட்டுமின்றி, ரத்தப்போக்கு (Bleeding disorders), பூஞ்சைத் தொற்று (Fun-

gal infection) போன்றவற்றாலும் பாதிக்கப்படலாம். பல தரப்பட்ட நோய்கள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. மனச்சோர்வு மற்றும் அறிவுத்திறன் வீழ்ச்சி கூட எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படலாம்.

சிகிச்சை முறை

இந்நோயை சிகிச்சை முறை மூலம் முழுமையாக குணப்படுத்த முடியாவிட்டாலும் நோயின் தொல்லைகளிருந்து நோயாளியைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். சிகிச்சை முறை மூலம் ரத்தத்திலுள்ள வைரஸ் கிருமியின் அளவைக்குறைத்து உடலிலுள்ள எதிர்ப்பு சக்தியை அதிகரித்து ஓரளவுக்கு ஆரோக்கியமாக வாழ முடியும்.

எய்ட்ஸ் வராமல் தவிர்ப்பது எப்படி?

1. சுய ஒழுக்கம் (ஒருவனுக்கு ஒருத்தி)
2. ஆணுறை மூலம் பாதுகாப்பான உடலுறவு
3. ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய ஊசிகளைப் பயன்படுத்துவது
4. அறுவைச் சிகிச்சைகளின் போது கிருமிநீக்கம் செய்யப்பட்ட ரத்தத்தைப் பயன்படுத்துவது.

என்பது போன்ற பலவகைகளில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் எய்ட்ஸ் நோய் வராமல் தவிர்க்க முடியும்.

தொடரும்....

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | மு.பிரியா |
| பிறந்த தேதி | : | 23-10-1988 ஞாயிறு 4.50 a.m. ஈரோடு |
| நட்சத்திரம் | : | உத்திரட்டாதி 1ம் பாதம், மீனராசி, கன்னி லக்கினம் |
| தந்தை / தாய் பெயர் | : | K.முருகேசன், ராஜாமணி முருகேசன் |
| முகவரி | : | எண்.6, இராஜாசேகர் தெரு, தி.நகர், சென்னை - 17. |
| கல்வி | : | M.Com., |
| தொழில் | : | Accountant, Chennai |
| கூட்டம் | : | காடை |
| எதிர்பார்ப்பு | : | சொந்த தொழில் அல்லது வேலை |
| தொடர்புக்கு | : | 98400 50009,98400 33888 |

❖❖❖❖❖

## தீயணைப்புத் துறை அலுவலர் திருமதி பிரியா ரவிச்சந்திரனுக்கு சிறந்த பெண்மணிக்கான கலாசார விருது

27-02-2012 அன்று சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் குளோபல் அட்ஜெஸ்ட்மென்ட்ஸ் சார்பில் வீரதீர செயல்புரிந்த சிறந்த பெண்மணிக்கான கலாசார விருதை தீயணைப்புத்துறை அதிகாரி திருமதி பிரியா ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவரது சார்பில் மகள்கள் சம்ஹிதா, சாத்விகா ஆகியோர் ஜோத்பூர் மகாராஜா எச்.எச்.கஜசிங் 2 அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

சென்னை எழிலகத்தில் கலசமகாலில் ஒரு மாதத்திற்கு முன்பு நடைபெற்ற தீ விபத்தில் பிரதான வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க தீவிர முயற்சி மேற்கொண்டபோது தீ விபத்தில் காயமடைந்தவர் திருமதி பிரியா ரவிச்சந்திரன். தீயணைப்புத் துறையில் சிறந்த முறையில் பணியாற்றி வந்தார். தற்போது சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விருது வழங்கும் விழாவில் ஜோத்பூர் மகாராஜா பேசும்போது, "பணியில் தலைமை ஏற்பதோடு நின்றுவிடாமல் முழுமையாக செயலில் திறமையைக் காட்டியவர் திருமதி பிரியா ரவிச்சந்திரன். இந்த விருதினைப் பெற்றுக்கொண்ட அவரது மகள்கள் தாயின் திறமைகளை அறிந்தவர்களாக இருப்பது மட்டுமல்லாது அவரைப் போன்ற தியாக உணர்வோடு இக்குழந்தைகளும் வருங்காலத்தில் திகழ்வார்கள் என்று நம்புகிறேன்" எனச் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜெர்மனி, நெதர்லாந்து, ஹங்கேரி, அமெரிக்கா, சீனா, ஜப்பான், பின்லாந்து உள்பட பல்வேறு வெளிநாட்டுப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

2012 ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண்மணிக்கான கலாசார விருதினைப் பெற்றுள்ள திருமதி பிரியா இரவிச்சந்திரனுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, அவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என பிரார்த்திக்கிறது.

❖❖❖❖❖

## திருமணங்களில் திருவிளையாடல்கள்

திரு.செ.நல்லசாமி

சென்ற இதழ் தொடர்ச்சி...

எச்சில் இலைகளில் வீணாக்கும் விலையுயர்ந்த உணவுப் பண்டங்களை இலையோடு சேர்த்து நகரத் தெருக்களில் கொட்டுவதைத் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு நமது இதயங்கள் இரும்பாகி விட்டன. இலையில் வைக்கக் கூடாது என்பதற்காகச் சிலர் மட்டும் சிரமப்பட்டு உண்பதும் உண்டு. இதனால், இவர்களின் உடல்நலம் கூடச் சில நேரங்களில் குன்றிப் போகும். சரிவர உண்ணாமல் உணவுடன் இலையை மூடும் நிர்பந்தத்தால் பலருடைய மனசு வேதனைப்படும். பொதுவாக ஆறிப்போன இந்த உணவை அரை மனதுடன் தான் உண்ண வேண்டியுள்ளது.

பொதுவாக அவரவர் வீடுகளில் வகைவகையான உணவு வகைகளை உண்ணும் வழக்கம் இல்லை. இட்லி, தோசை, பணியாரம், பொங்கல், சப்பாத்தி, பூரி என்ற அனைத்தையும் ஒரே நாளில் சமைத்து உண்பதும் இல்லை. இட்லி என்று இருந்தால் ஒரு சில வீடுகளில் மட்டுமே சட்னி சாம்பார் இருக்கும். பல வீடுகளில் சட்னி அரைத்தால் சாம்பார் வைக்க மாட்டார்கள். சாம்பார் வைத்தால் சட்னி அரைக்க மாட்டார்கள்.

அதே நேரத்தில் திருமண விருந்துக்கு என்று வந்து விட்டால் ‘அயிட்டம் குறைந்து போய் விட்டதே! நான்கோடு நிறுத்தி விட்டார்களே? கஞ்சத்தனத்தைக் காட்டி விட்டார்களே!’ என்று சொல்லி ஏளனமாக விருந்தை விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஒரு சில இடங்களில் தங்களுடைய தனித்தன்மையையும் செல்வச் செழிப்பையும் காட்டுவதற்காக ஒவ்வொரு இலைக்கும் தனித்தனியான தண்ணீர் பாட்டில் (Mineral Water) வைப்பதுண்டு.

‘விருந்தினரின் உடல் நலம் மாசுபட்ட தண்ணீரால் கெட்டுப் போய் விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில், வந்திருக்கும் நமது நலன் கருதி வைத்திருக்கிறார்கள்’ என்ற நினைப்பில் குடிப்பவர்கள் குறைவானவர்கள்.

‘இவனுக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா?
என்று வெறுப்பில் குடிப்பவர்களே அதிகமானவர்கள்.

இரவு விருந்து உண்ணச் சில ஆயிரமாகக் கூடும் இவர்களின் எண்ணிக்கை முகூர்த்தத்தின் போது நூற்றுக்கும் குறைவாகக் கூட இருக்கும்.

திருமண மண்டபங்களில் பயன்படுத்தும் பாலித்தீன் பண்டங்களாலும், வீணாக்கப்படும் உணவாலும் சுற்றப்புறச் சூழல் வெகுவாகக் கெட்டுப் போகின்றது. மொத்தத்தில் நகரம் நரகமாக்கப்பட்டுவிடுகிறது.

அன்று திருமண வீட்டார்க்கு உறவினர்களும், உற்ற நண்பர்களும் உறுதுணையாக இருந்து உதவினார்கள். திருமண வீடும், சுற்றுப் புறமும் உறவினர்களால் சுத்தப்படுத்தப்பட்டு,

பந்தல் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டன. திருமண விருந்துக்காகப் பால், பழம், காய்கறி உள்ளிட்டவற்றை இவர்கள் கொண்டு வந்தனர். தண்ணீர் எடுத்து வருவதற்கும், காய்கறிகள் நறுக்குவதற்கும் உள்ளூர்ப் பெண்கள் தங்கள் வீட்டுக் குடங்களுடனும், அரிவாள் மனைகளுடனும் மாலை **3** மணிக்கே மண வீட்டிற்குச் செல்வார்கள்.

நெருங்கிய உறவினர்களாலும் உற்ற நண்பர்களாலும் உணவு சமைத்துப் பரிமாறப்பட்டது. கூலிக்கு ஆட்கள் அமர்த்தப்படுவது அன்று மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நல்ல உறவும், நட்பும், இணைப்பும், பிணைப்பும், ஈடுபாடும் அன்று இருந்தன. காலப்போக்கில் ஊரார் உறவினர் ஒத்துழைப்பும், ஊர்த்தூய்மையும், ஊர்க் கோயில் பராமரிப்பும் ஓரம் கட்டப்பட்டு விட்டன. நல்ல அம்சங்கள் நாளடைவில் மாறி விட்டன; நம்மை விட்டுப் போய் விட்டன.

இந்திய நாட்டிற்கே பெருமை சேர்த்த கூட்டுக் குடும்ப வாழ்க்கை குறைந்து கொண்டே வந்து வட்டது. வேளா வேளைக்கு மொடா வைத்துப் பொங்கிப் போட்ட குடும்பங்கள் அன்று எராளமாக இருந்து வந்தன. ஒரு கூட்டுக் குடும்பத்தில் பெரியவர் சிறியவர் என எண்ணிக்கையில் எழுபது எண்பது பேர் இருப்பார்கள்.

உற்ற உறவினரின் வீட்டிலோ, நெருங்கிய நண்பரின் இல்லத்திலோ திருமணம் என்றால் அவர்களுக்கு உதவுதல் பொருட்டு கூட்டுக் குடும்பத்திலிருந்து ஆளுமை கொண்ட இரண்டு மூன்று பேர் ஓரிரு வாரங்களுக்கு முன்பே அங்கு அனுப்பப்படுவார்கள். அவ்வாறாக அனுப்பப்பட்ட அவர்கள் திருமணம் முடிந்த பின்பும் கூட ஓரிரு நாட்கள் ஒத்தாசையாக இருந்து விட்டு வரவு செலவு கணக்குகளை எல்லாம் நேர் செய்து விட்டுத்தான் வீடு திரும்புவார்கள்.

அப்படிப்பட்ட உறவான சொந்தங்களையும் ஒட்டுதலான பந்தங்களையும் கொண்டிருந்த சமுதாய அமைப்பு இன்று வெகுவாக மாறிப் போய் விட்டது. சிதறு தேங்காய் போல் ஆகி விட்டது.

'வீட்டின் பெயரோ அன்னை இல்லம்

அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்'

என்பது கூட நடைமுறை நாகரிகமாகிப் போனது.

அழகு நிலையங்களுக்குப் போய் தங்களை அழகுபடுத்திக் கொண்டு திருமணத்திற்கு வரும் ஆடவரும் மகளிரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

திருமண மண்டபத்தில் ஒத்தாசையாக இருந்து ஓடியாடி வேலை செய்வதில் கௌரவம் பார்ப்பவர்களே அதிகம். இன்று திருமண விழாக்களுக்கு வரும் உறவினர்களும், நண்பர்களும் உதவுவதற்குத் தயாராக இல்லை. சுமக்க முடியாத அளவுக்குத் தங்க நகைகளுடன் வரும் தாய்மார்கள் விடிவதற்குள் பட்டுப் புடவைகளை மாற்றிக் கொண்டு, துணிக்கடை பொம்மைகளாகவே காட்சி தருகின்றனர்.

தொடரும்..

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை
# 50வது ஆண்டு வளர்ச்சியின் ஒரு பார்வை

சென்ற இதழ் தொடர்ச்சி...

பேராசிரியர் முனைவர் களி மேடு கா.இலட்சுமணன்
முன்னாள் சங்கச் செயலாளர்

அந்த நல்ல உள்ளத்திற்கு (திரு. சேனாதிபதி கவுண்டர்) நன்றி கூறி சங்கம் அங்கு குடியேறியது. சென்னை அசெம்பிளியில் முதன்முதலாக கொங்குச் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று பேசியவரும் சேனாதிபதி கவுண்டர் அவர்களே. கொங்கு நண்பர்கள் சங்கம் சென்னையிலிருந்து படிப்படியாக மாநிலம் முழுவதும் தன் பணியினைப் பரப்பி வந்தது.

நான்காம்படியாக, செய்தி மடல் தொடங்கப்பட்டு சமுதாயக் கொள்கைகள், பழைய கலாச்சாரம், பண்பாடு, இன்றைய விவசாயத் தொடர்துன்பங்கள் போன்றவை விவாதிக்கப்பட்டு வருகின்றன. செய்தி மடல் கிராம மக்களுக்குக் கல்வி முன்னேற்றம், மருத்துவ நெறிமுறைகள் பற்றி இன்னும் அதிகம் பேச வேண்டும். வயது வந்தோருக்கான மருத்துவத்தின் தந்தை Dr.வி.எஸ்.நடராஜன், பழம்பெரும் சித்தா வைத்தியத்திற்கு டாக்டர். சுபத்ரா சதீஷ் போன்ற பலரும் இன்று உள்ளனர். அவர்களைப் பயன்படுத்தி வெளியூர்களில் மருத்துவமனைகள் அமைத்திடத் தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

அடுத்தபடி, கொங்குச் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்ற சங்கநாதம் எங்கும் ஒலிக்கத் தொடங்கியது. அரசாங்கத்திலிருப்பவர்கள், ஓய்வு பெற்றோர், ஒவ்வொரு துறையிலும் உள்ள மொத்த இடங்கள், அதில் கொங்கு சமுதாய நண்பர்கள் எவ்வளவு, சேர வேண்டிய பங்கென்ன போன்றவற்றைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அருட்செல்வரின் ஆதரவில் குவின்ஸ் ஓட்டலில் எல்லா MLA க்களையும், ஆர்வமுள்ள உறுப்பினர்களையும் அழைத்து விவாதிக்கப்பட்டது. மாரா நர்சரி திரு.கே.எம்.மாரப்பன் தலைமையில் ஒரு குழு கோவையில் தங்கி மாநாடு நடத்த ஏற்பாடு செய்தல், MLA க்கள் மக்களைத் திரளாகக் கொண்டு சேர்ப்பது, சென்னையிலிருந்து ஒரு குழு வெவ்வேறு குழுவினருடன் ஒருங்கிணைந்து கவனம் செலுத்தவதென முடிவெடுக்கப்பட்டது.

எல்லாச் செலவுகளையும் அருட்செல்வர் அவர்கள் ஏற்றுகொண்டார்கள்.

ஊர்களுக்குச் சென்று கொள்கை பரப்பிய குழு ஆங்காங்கு நன்கொடையும் பெற்றது.

பின்னர் இக்கோரிக்கை MLA க்களால் முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் முடிவில் பதில் கூறும்போது கொங்குச் சமுதாயத்தைப் பிற்படட வகுப்பில் சேர்ப்பதாக முதல்வர் அறிவித்தார். அன்று மாலையே அன்றைய முதல்வர் கலைஞர் திருவள்ளுவர் சிலை திறக்க டில்லி செல்கிறாரென்று கேள்விப்பட்டதும் இரண்டு மணி நேரத்தில் ஏழு, எட்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் உறுப்பினர்கள் கவுன்சில் கட்டிடத்திற்குச் சென்றனர். முதல்வரை வேண்ட அவரும் அமைச்சர் சாதிக்பாட்ஷாவும் வெளியில் வந்தனர். முதல்வர் செயலரின் மாலையை ஏற்றுக்கொண்டார்.

அடுத்த நாள் காலை, அருட்செல்வருக்குச் செய்தியைக் கூறினோம். அகமகிழ்ந்து, அதற்காகப் பாடுபட்ட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தைப் பாராட்டினார். இது ஒரு பெரிய வெற்றி. சமுதாயத்தினருக்குப் புதிய ஒளி விளக்கு. இத்துடன் இங்கு 1978 ல் விடை பெறுகிறேன், அன்றிலிருந்து அடுத்தவர் எழுதவழிவிட்டு. அன்றைய நிர்வாகக்குழு பல காரியங்களை, கனவுகளை நிறைவேற்ற முடியவில்லை. சொந்த இடம் இல்லை. ஆனால் இன்று பலமுகவரிகளுடன் சங்கம் பீடுநடைபோடுவது பெருமையாகவும் மனநிம்மதியைத் தருவதாகவுமுள்ளது.

அயராது உழைத்து நமது கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப் பாடுபட்ட சங்க நிர்வாகிகள் திரு. கே.எம்.சென்னியப்பன், PTC திரு.கே.எம்.மாரப்பன், சக்தி Ex.E.C.சந்திரசேகரன், கரூர் கே.வையாபுரி, திரு.முத்துசாமி போன்ற நல்ல உள்ளங்கள் பலர் இன்று நம்மிடையே இல்லையேயென்ற ஏக்கம் மற்ற உறுப்பினர்கள் மனத்திலுமிருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் வரவு - செலவு நிதியறிக்கை தயாரிப்பது போல சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தன் சமுதாயத்திற்கு, தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு ஆற்றிய பணிகளை ஆடிட் செய்து கொள்ள வேண்டும்.

ஐம்பதாவது ஆண்டு விழாவை 2012ல் சங்கம் சீரும் சிறப்புமுடன் கொண்டாட வேண்டி வாழ்த்தி, 1978 ஆண்டுக்குப்பின் தொடர்ந்த வளர்ச்சியை அன்றைய நிர்வாகிகள் வாயிலாக கட்டுரை வடிவில் எதிர்நோக்குகிறேன்.

❖❖❖❖❖

# கொங்கு வேளாளர் தற்போதைய திருமணச்சடங்குகள்

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

**முகூர்த்த நாளுக்கு முதல்நாள் நிகழ்ச்சிகள்** :

**மாப்பிள்ளை அழைப்பு**

திருமண மண்டபத்திற்கு வரும் மாப்பிள்ளை மங்கள வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்படுகிறார்.

**நிச்சயதார்த்தம்**

ஏற்கனவே நிச்சயதார்த்தம் நடைபெறாமல் உறுதி மட்டும் செய்திருந்தால் திருமணச்சடங்குகளின் முதல் நிகழ்ச்சியாக தற்போது நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது.

மேடையின் நடுவில் முக்காலிமேல் வெற்றிலை, பாக்கு, பழம் உள்ள தட்டு இருக்கும். எதிர் எதிரே மணமக்கள் வீட்டார் அமர்ந்து பேசத் தொடங்குவர். முதலில் மணமகன் வீட்டார், மணமகள் வீட்டாரிடம், 'உங்கள் பெண்ணை எங்கள் மகனுக்கு மணமுடிக்க ஏற்கனவே உறுதி செய்தபடி உங்கள் சம்மதத்தைக் கேட்கிறோம்' என்பர். மணமகள் வீட்டாரும் மகிழ்வுடன் இசைவு தருவர். பழத்தட்டுகள் மாற்றிக்கொள்ளப்படும். மணப்பெண்ணை அழைத்துப் பரிசுப்பொருளும், புத்தாடையும் உள்ள தட்டினைக் கொடுப்பர். மணமகள் அறையினுள் சென்று, மணமகன் வீட்டார் அளித்த புதிய ஆடையை அணிந்து வெளியில் வருவார். மணமகள் மடியில் வெற்றிலை பாக்கு, மஞ்சள், எலுமிச்சை முதலியவற்றைக் கட்டி அங்குள்ள பெரியோர்களை வணங்கச்செய்வர்.

**உப்பு மாற்றல்**

மணமகள் வீட்டாரும், மணமகன் வீட்டாரும் கடைக்குச் சென்று கூடையில் வாங்கி வந்த உப்பை மாற்றிக் கொள்வர். இந்தச் சடங்கை பெண்களே முன்னின்று நடத்துவர். உப்புதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினை, உப்பில்லாத பண்டம் குப்பையிலே என்பன முதுமொழிகள். உப்பு தான் கரைந்து தான் சேரும் பொருளுக்குச் சுவை தருவது போல, இந்த இரு குடும்பங்களும் ஒன்றோடொன்று இணைந்து, ஒன்றில் ஒன்று கலந்து என்றும் மகிழ்வாக வாழ வேண்டும் என்னும்

நோக்கில்தான் உப்பு முதலில் வாங்கப்படுகிறது. பெண்ணுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டும் விதமாகவும் இந்தச் சடங்கு நடைபெறுகிறது.

**பட்டினிச் சீர்**

திருமண மண்டபத்திற்கு வந்து சேர்ந்துள்ள மணமகனும், மணமகளும் அன்று காலை முதல் விரதம் இருந்து வருவர். வாழ்வில் முக்கிய நிகழ்வாக திருமணம் இருப்பதையொட்டி, இல்லற வாழ்க்கை இனிதாக அமைந்திடும் பொருட்டு, இந்தப் பட்டினி விரதம் மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் சடங்கின்போது பெண்ணிற்கும், மாப்பிள்ளைக்கும் தாய்மாமன்கள் சீர்கள் அளிப்பர். உடல் நலன், மன நலன், உள்ளத்தூய்மை ஆகியவற்றிற்காகவும், வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்பதற்காகவும் குல தெய்வத்தை வேண்டி அதன் அடையாளமாக இந்த விரதம் இருக்கின்றனர்.

**மங்கல நீராட்டு**

மங்கல நீராட்டு என்பது பெண்ணுக்கும், பிள்ளைக்கும் நீராட்டுச்செய்தல். விரதம் இருந்து வரும் பெண், மாப்பிள்ளை இருவருக்கும் தனித்தனியே இரவு விருந்திற்கு முன்னர் நீராட்டு நடைபெறும். அருமைக்காரர் துணை செய்ய ஆணுக்கும், அருமைக்காரி உதவி செய்யப் பெண்ணுக்கும் நீராடல் நடைபெறும். அருமைக்காரருக்கு உதவியாக நாவிதனும், அருமைக்காரிக்கு உதவியாக நாவிதன் மனைவியும் இருப்பர். இந்நிகழ்ச்சியை மணப்பந்தலில் தோழர் தோழியர் சூழ்ந்து நின்று பார்த்திருப்பர். நீராடியதும் செஞ்சோறு சுற்றிக் கண்ணேறு கழிப்பர். புத்தாடை அணிவித்து உறவினர் சிறப்புச் செய்வர். நீராடி, புத்தாடை புனைந்தபின் மணமக்கள் விரத விருந்து உணவு உண்பர்.

**இரவு விருந்து**

மணமக்கள் விரத (பட்டினிசாத) விருந்து உண்ணும் அதே வேளையில் மண்டபத்தில் விருந்தினர்களுக்கும், உறவினர்களுக்கும் விருந்து படைக்கப்படும்.

**முகூர்த்தக் காலிடல்**

விருந்தின் பின்னர்ப் பச்சைப் பந்தலில் சனி மூலையில் காலையிலேயே வெட்டி எடுத்து வைத்திருந்த முகூர்த்தக் காலை நடுவார்கள். நவதானியங்களைக் காசுடன் சேர்த்து அதில் முடிச்சிட்டு செஞ்சாந்து, மஞ்சள் பூசி வைப்பர். அருமைக்காரர்

அருமைக்காரி உடனிருக்க, நாவிதன் உதவி செய்ய இச்சடங்கு நடைபெறும். திருமண நிகழ்ச்சிகள் குறைவின்றி நடைபெற வேண்டுமெனப் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களையுடைய முக்கடவுளரையும் வேண்டுவது இச்சடங்கின் பொருளாகும்.

வரவேற்பு

மணமகன், மணமகள் இருவரும் மேடையில் வந்து நாற்காலிகளில் அமர்கின்றனர். நண்பர்களும், உறவினர்களும் மணமேடை சென்று மணமக்களுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றனர். மணமகள் மணமகனின் வலப்புறம் அமர வைக்கப்படுகிறார்.

இணைச்சீர்

மணமகனின் உடன் பிறந்தாள் இதில் முக்கியப்பங்கு வகிப்பாள். மணப்பந்தலின் நடுவில் அலங்கரிக்கப்பட்ட மணவறையில் மணமகன் மணக்கோலத்துடன் வீற்றிருப்பான். அவன் உடன்பிறந்தாள் மணப்பெண் போல் அலங்கரிக்கப்பட்டிருப்பாள். அவள் தலைமீது ஒரு பேழைமுடியைத் தலையில் சும்மாட்டின்மீது தாங்கி இருப்பாள். ஒரு நீள் செவ்வக வடிவில் முங்கில் பிரம்புகளால் பின்னப்பட்ட கூடை பேழை முடி எனப்படும். அக்கூடையில் தாலியும் ஒரு குழவிக் கல்லும் இருக்கும். அவள் கையில் ஒரு செம்பு நீரைக்கொடுத்து மணமகனையும், மணவறையையும் சுற்றி அருமைக்காரி நடத்தி வந்து மணவரையில் பேழையை இறக்கி மணமகனின் வலப்புறம் வைக்கச்செய்து அதனுள் அவளை நிறுத்துவார்கள். அருமைப் பெரியவர் மணகமனின் உடன்பிறந்தாளுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து மடியில் கட்டிக்கொள்ளச் சொல்லுவார். கூறைச் சேலையைக் கொசுவ மடிப்பில் மடித்து ஒரு தலைப்பை மணமகன் கக்கத்தில் பிடிக்குமாறு செய்து மறு தலைப்பை உடன் பிறந்தவள் கையில் கொடுப்பார். நாவிதன் மங்கல வாழ்த்தைப் பாடி முடிப்பான். பிறகு அருமைக்காரர் இணைச்சீர்க்காரிக்கும், மணமகனுக்கும் அருகுமணம் எடுத்தபின் பேழையைத் தலையில் வைத்து மணமகனுடன் திருமண வீட்டுக்குள் அனுப்பி வைப்பார்.

மகனைப் போலவே மகளுக்கும் இணையான சிறப்பு உண்டு என்று உறுதியளிக்கும் நிகழ்ச்சி இது. மணமகனின் உடன் பிறந்தாளுக்குச் செய்யப்படும் இச்சீரானது திருமணத்திற்குப் பிறகும் உடன்பிறந்தாள் உறவும் பாசப்பிணைப்பும் நீங்காது என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

- தொடரும்

❖❖❖❖❖

# முப்பெரும் விழா
# கொங்கு நண்பர்கள் சங்கம், கரூர் மாவட்டம்

கரூர் மாவட்டம் கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பில் 22-01-2012 அன்று கரூர் கொங்கு திருமண மன்றத்தில், பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா, தீரன் சின்னமலைக் கவுண்டரின் 256 வது பிறந்த நாள் விழா மற்றும் கொங்கு சாதனையாளர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு கரூர் கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் திரு. SPS.K.பழனிச்சாமி தலைமை தாங்கினார். செயலாளர் திரு. கே.பாலுகுருசாமி வரவேற்புரையாற்றினார். கரூர் கொங்கு மன்றத் தலைவர் திரு.எம்.விஜயன் மற்றும் கரூர் கொங்கு வெள்ளாளர் தர்ம அறக்கட்டளைத் தலைவர் டாக்டர். வி.செல்லப்பன் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை தலைவரும், கரூர் டெக்ஸ்டைல் உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத்தலைவருமான கொங்குமாமணி திரு.அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்கள், 2011 ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது பெற்ற வெள்ளியனை அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு.ஏ.கருப்பண்ணன், கரூரைச் சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி ஆர்.மல்லிகா, கிராம சேவா விருது மற்றும் கொங்கு சாதனையாளர் விருது பெற்றவருமான வேட்டமங்களம் ஊராட்சி மன்றத்தலைவி திருமதி ராஜேஸ்வரி ஞானசுந்தரம், தேசிய அளவில் தங்கப் பதக்கம் பெற்ற எரிபந்து வீராங்கனையும், தண்ணீர்பந்தல்பாளையம், திரு.மூர்த்தி அவர்களில் புதல்வியுமான செல்வி எம்.சுகன்யா, துப்பாக்கி சுடும் போட்டியில் மாநிலத்தில் முதல் இடமும், தேசிய அளவில் நான்காம் இடமும் பெற்றவரும், வீராக்கியம் திரு.ராமலிங்கம் அவர்களின் புதல்வருமான செல்வன் ஆர்.நவநீதன் ஆகியோருக்கு சவிதா பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் என்.எம்.வீரையன் அவர்களும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் பொறிஞர் திரு. பரணி K.பாலசுப்பிரமணி அவர்களும் பரிசு வழங்கி, பாராட்டி சிறப்புரை நிகழ்த்தினர்.

இச்சிறப்புமிகு விழாவில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 261 மாணவ-மாணவியருக்கு பரிசு, கல்வி உதவித்தொகை, கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசுப்பொதுத்தேர்வில் 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவில் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் சிறப்பு விருந்தினர்கள் டாக்டர். என்.எம்.வீரையன், திரு.பரணி கே.பாலசுப்பிரமணி ஆகியோருக்கு கரூர் கொங்கு இளைஞர் அணி சார்பாக பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

சங்கப் பொருளாளர் திரு.பவானிகே.பொன்னுசாமி நன்றியுரை வழங்கினார். விழா நிகழ்ச்சிகளை கரூர் கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி துணை முதல்வர் திருமதி வி.சுசீலா மற்றும் ஆசிரியை திருமதி என்.பரமேஸ்வரி தொகுத்து வழங்கினார்கள்.

தீரன் சின்னமலையின் பிறந்த நாள் விழா கொண்டாடி அவரது புகழைப்போற்றியும், சாதானையாளர்களுக்குப் பாராட்டு தெரிவித்தும் மாணவ மாணவிகளுக்கு பரிசு பாராட்டு உதவி வழங்கியும் மிகச்சிறப்பாக நடைபெற்ற இம்முப்பெரும் விழா ஏற்பாடுகளை துணைத்தலைவர்கள் சி.கணேசன், திரு.பி.எம்.சம்பத்சாமியப்பன், செயலாளர் திரு.கே.பாலுகுருசாமி, இணைச்செயலாளர்கள் திரு. தங்கவேல், திரு.எல்.சிவசாமி, பொருளாளர் திரு.பவானி கே.பொன்னுசாமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

❖❖❖❖❖

# மன அமைதி

1. யாரையும், எதையும் குறை கூறாதீர்கள்.
2. யாராவது உங்களைத் திட்டினால் கண்களை மூடிக்கொண்டு பொறுமையாக இருங்கள்.
3. பகைமையை வளர்க்காதீர்கள். மறந்து விடுங்கள், மன்னியுங்கள்.
4. உங்களுக்குப் பிடித்தமான வேலை அல்லது பொழுதுபோக்கில் நீங்கள் சுறுசுறுப்பாக ஈடுபவீர்களானால் உங்களுக்கு மிகுந்த மன அமைதி கிட்டும்.
5. ஒழுக்க நியதிகள், நன்னெறிகள், மறைநூல் வாக்கியங்கள், பணிவாளர்கள் மற்றும் மகான்களது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
6. ஒரு பொழுதும் பிறர் மீது பொறாமை கொள்ளாதீர்கள். உங்கள் துன்பத்திகுப் பிறரைப் பழியாக்காதீர்கள்.
7. எப்போதும் ஏதாவது பயனுள்ள நன்மை பயக்கும் வேலையைச் செய்யுங்கள்.
8. நீங்கள் உடலளவில் ஒய்வெடுத்துக்கொண்டிருந்தாலும், மனதை வெறுமையாக வைத்திருக்காதீர்கள்.
9. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனின் திருவருள் இயங்குகிறது என்பதைக் கண்டுணர்ந்து, உங்களுக்குள்ளும் உலகத்துடனும் அமைதியாக வாழ்வதுதான் அறிவுடைமையாகும்
10. ஒவ்வொரு நிலையிலும் நமது பார்வையை தெளிவுப்படுத்தி சரியான பாதையைக் கண்டுபிடிக்க ஆத்ம சோதனை தேவைப்படுகிறது.
11. எல்லாவிதத் தூண்டுல்களிலிருந்தும் விலகியிருங்கள், தூண்டுதல்களை உண்டாக்கும் இடங்களுக்குச் செல்லாதீர்கள். பிறகு தூண்டுதல்களைத் தவிர்க்கப் போராட வேண்டியிருக்கும்.
12. உங்களுக்கு மன அமைதி வேண்டுமென்றால் நீங்கள் செய்யக்ககூடாது என்று எதையெல்லாம் நினைக்கிறீர்களோ அந்த எல்லாக்காரியங்களையும் செய்யாமல் நிறுத்துங்கள். அதைபோல நீங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கும் காரியங்களை உடனே செய்யத் தொடங்குவதும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
13. நீங்கள் முற்றிலும் மனம் தளர்ந்து நம்பிக்கை இழந்து இருக்கும்பொழுது நமது மறைநூல்களின்பால் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், அல்லது மகான்களின் சிறந்த நூல்களைப் படியுங்கள். அல்லது ஒரு மாதம் விடுமுறை எடுத்துக்கொண்டு தீர்த்த யாத்திரையை மேற்கொள்ளுங்கள்.
14. எதிலும் எவருக்கும் புத்திமதி சொல்லப்போகாதீர்கள்.. நீங்கள் கேட்கப்பட்டாலன்றி, உங்கள் வேலையைப் பாருங்கள்.
15. எல்லாவிதத்திலும் வாழ்வின் துக்கங்களைக் குறைப்பதற்கு உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். ஆனால் துளிகூட கவலைப்படாதீர்கள்.
16. அனைவருடனும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணருங்கள்.
17. தினமும் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது, இரண்டு நிமிடம் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

– சுவாமி சிவானந்தர்

❖❖❖❖❖

## ஆன்மீகம் - ஆலய வழிபாடு

1. பிரதான வாசல் வழியாகத்தான் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.
2. குறிப்பிட்ட காலம் தவிர பிற நேரங்களில் கோயிலுக்குள் செல்லுதல், அங்குச் சென்று படுத்திருத்தல் கூடாது.
3. அங்குள்ள தூண்கள், சிலைகள் ஆகியவற்றின் மீது ஏறி அமரக்கூடாது.
4. கோயில் மூடியிருக்கும் பொழுது வெளியே நின்று வழிபடக்கூடாது.
5. தேங்காய், பழம், பூ, சூடம் போன்ற எவ்வித பொருளும் எடுத்துச் செல்லாமல் வெறுங்கையுடன் கோயிலுக்குச் செல்லக்கூடாது.
6. கைலி உடுத்திக்கொண்டு கோயிலுக்குச் செல்லக்கூடாது.
7. அர்ச்சனைப் பொருட்களை இடுப்பிற்கு கீழே தொங்கவிட்டுக்கொண்டு செல்லக்கூடாது.
8. அர்ச்சனைப் பொருட்களை இடது கையால் தூக்கிச்செல்லக்கூடாது.
9. ஓர் ஆடையுடன் மட்டும் அல்லது ஈர ஆடையுடன் உள்ளே செல்லக்கூடாது.
10. கோயிலில் அணைந்த விளக்கினை ஏற்றலாம். எரிந்து கொண்டிருக்கும் விளக்கை அணைக்ககூடாது.
11. விளக்கு எரியாத இடத்தில் வழிபடக்கூடாது.
12. கோயிலில் விளக்கு அணையும் நிலையில் இருந்தால் திரியைச் சரிசெய்து விளக்கை எரியவிட வேண்டும்.
13. கோயிலில் தலைவாசல் படியில் உட்காரக் கூடாது.
14. கோயிலில் தலைவாசல் படியில் சூடம் ஏற்றக்கூடாது.
15. புலால் உண்ட அன்று கோயிலுக்குச் செல்லக்கூடாது.
16. தலைமுடியைக் கோதுதல், கூந்தலை அவிழ்த்து விடுதல், மூக்கு சிந்துதல், எச்சில்

துப்புதல், வெற்றிலை போடுதல், கால்களை நீட்டி உட்காருதல், படுத்தல், உறங்குதல், ஆகியவற்றைச்செய்யக் கூடாது.

17. எக்காரணம் கொண்டும் கோயிலுக்குரிய பொருளை நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது.

18. கோயிலுக்குச் சென்று விட்டு வீட்டிற்கு வந்து சிறிது நேரம் கழித்து கை, கால் கழுவ வேண்டும். ஆனால் குளிக்கக்கூடாது.

**நவகிரக வழிபாடு**

நவக்கிரங்களில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியோர் வலமாகவும், இராகு கேது ஆகிய இருவரும் இடமாகவும் சுற்றுகிறார்கள்.

| நகவக்கிரகங்கள் | கடவுள் | வழிபட கிடைக்கும் பயன்கள் | நிறம் | நவரத்தினம் |
|---|---|---|---|---|
| சூரியன் | சிவன் | கண்நோய், உடல்பிணி நீங்கும் | ஆரஞ்சு, சிவப்பு | மாணிக்கம் |
| சந்திரன் | ஈஸ்வரி | ஆயுள் விருத்தி, செல்வ வளம் உண்டாகும் | வெள்ளை | முத்து |
| செவ்வாய் | முருகன் | வெற்றி, தைரியம் உண்டாகும் | சிவப்பு | பவளம் |
| புதன் | விஷ்ணு | கல்வி, அழகு, சிறப்பு உண்டாகும் | பச்சை | மரகதப் பச்சை |
| குரு | பிரம்மா | நல்வாழ்க்கை, நன்மக்கட்பேறு உண்டாகும் | பொன்னிறம் | புஷ்பராகம் |
| சுக்கிரன் | லஷ்மி<br>இந்திரன் | புகழ், செல்வம் உண்டாகும் | வெள்ளை | வைரம் |
| சனி | ஏழுமலையன்<br>அய்யனார்<br>கற்பகவிநாயகர் | நீண்ட ஆயுள் கிடைக்கும் | கறுப்பு | நீலம் |
| இராகு | காளி | சகல நோய்களும் நீங்கும் | கருநீலம் | கோயமேதகம் |
| கேது | விநாயகர்<br>சித்திபுத்தன் | செல்வம், ஞானம், புகழ்<br>வெற்றி, கிடைக்கும் | பலநிறம் | வைடூரிம் |

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | வை.சுந்தர் |
| பிறந்த தேதி | : | **29–09–1980** திங்கட்கிழமை **14.52** சேலம் |
| நட்சத்திரம் | : | ரோகினி **4**ம் பாதம், ரிஷப ராசி, மகா லக்னம் |
| தந்தை/தாய் பெயர் | : | ப.வையாபுரி, வருமானவரி ஆய்வாளர் (Retd) இல.ஜெயா |
| முகவரி | : | **2/172/4**, ஜெயா இல்லம், சின்னமுதலைப்பட்டி நாமக்கல் **637002**, போன் - 98409 00342, 04286-277709. |
| கல்வி | : | B.E., (EEE) |
| தொழில் | : | Senior Software Engineer in MNC at Bangalore |
| மாத வருமானம் | : | சுமார் ரூ. ஒரு இலட்சம், சொத்து சுமார் **1** கோடி |
| உயரம், நிறம் | : | **5.6** அடி நல்ல சிவப்பு |
| குலம், கோயில் | : | கண்ணந்தை, நவலடியான் மோகனூர், நாமக்கல் |

சேராத நட்சத்திரங்கள்

செவ்வாய் இல்லை, லக்கினத்தில் கேது, 7ல் ராகு, உள்ளது. ரோகிணி அஸ்தம், திருவோணம், திருவாத்திரை, சுவாதி சதயம், மகம், பூரம், உத்திராடம் பூசம், கிருத்திகை, சித்திரை **34**, விசாகம் **123**

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | வி.சுபஸ்ரீ |
| பிறந்த தேதி | : | **21–08–1976** |
| பிறந்த நேரம், இடம் | : | கோவை |
| நட்சத்திரம் | : | திருவாதிரை மிதுனராசி கன்னிலக்கினம் |
| தந்தை பெயர் | : | பி.வேலுசாமி |
| தாயார் பெயர் | : | நாயகி வேலுசாமி |
| உடன் பிறப்பு | : | **3** பெண்கள் மட்டும் திருமணம் ஆகிவிட்டது |
| கல்வி | : | B.P.T. பிஸியோதெரப்பிஸ்ட் |
| தற்போதைய இருப்பிடம் மற்றும் தொழில் | : | வெளிநாடு, கனடா நாட்டில் அரசு உத்தியோகம் |
| வருவாய் | : | மாதம் சுமார் Rs. 2,00,000/- |
| உயரம் / நிறம் | : | **5.3** அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : | வரகு உண்ணாத பெருங்குடியான் கூட்டம் |
| சொத்து | : | பங்களா, பூமி, பேக்டரி |
| எதிர்பார்ப்பு | : | ஜாதகர் திருமணமாகி ஒரு வருடத்திலேயே மண முறிவு ஆனவர். தற்பொழுது கனடா நாட்டு குடிஉரிமையும் பெற்றுள்ளார். வெளிநாட்டில் குறிப்பாக அமெரிக்கா, கனடா ஆகியவற்றில் வாழும் படித்து வேலையில் உள்ள திருமணமாகாத அல்லது மணமுறிவு ஏற்பட்ட வரன்கள் மட்டும் தேவை. |

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 1,00,000/- |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736
தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖